# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம்

## வழங்கும்

# இலக்கியப் பதாகை (பறப்பு-9)




**"விடியும் என்று விண்ணை நம்பு**

**முடியும் என்று உன்னை நம்பு"**

என்ற தன்னம்பிக்கையே மனிதனை வெற்றி பெற செய்கிறது.

திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட -கலை மற்றும் அறிவியல் புலம் (ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம்) - தமிழ்த்துறை சார்பில் ஒன்பதாம் நிகழ்வாக செம்படம்பர் 20 ஆம் தேதி இலக்கியப்பதாகை பறப்பு – 9 **சிகரம் தொடு** என்ற தலைப்பில் நிகழ்வு நடந்தேறியது.







இந்நிகழ்வில் சொல்வேந்தர் செல்வக்கனி அவர்கள் (பட்டிமன்றநடுவர் - பொதிகை தொலைக்காட்சி புகழ், கவிஞர், சொற்பொழிவாளர்) மாணவர்களுக்கு மத சமநிலை, மனித சமநிலை, கல்வி சமநிலை போன்ற ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை எவ்வாறு நிறுவுவது? இலக்குகளை நோக்கி பயணிப்பது எவ்வாறு? சான்றோர்களின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்வுகள் போன்றவற்றை நகைச்சுவையாக உரையாடினார். மேலும் எதார்த்த நடப்பியலோடு தொடர்பு பட்ட செய்திகளை மாணவர்களுக்கு எழிலுற பேசினார். இளம் தலைமுறையினர் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் கலாச்சாரம், பண்பாடு நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானது என்பதனையும், சோம்பி திரியாமல் சுறுசுறுப்புடன் இயங்குவது மாணவர்களை வெற்றிக்கு உயர்த்தும் என்பதையும் திறம்பட பேசினார்.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.







முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் தலைமை உரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினரை கவிஞர் மார்சல்முருகன் அவர்கள் அறிமுக உரையாற்றினார்.

முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்த்துறையில் சார்பில் உதவிப்பேராசிரியர்கள் திரு.அ.முத்துக்குமார், முனைவர்.ந.சுரேஷ், திரு.சு.பழநியப்பா ஆகியோர் விழாவை ஏற்பாடு செய்து இருந்தனர்.







இவ்விழா, மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களின் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.